**<u>முதலாவது கூடுதல்  சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>**
**<u>O.S. No. 385/2023</u>**

**<u>Witness  Pw2</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குலோத்துங்கள் | தொழில் | |
| த/பெ | பாலதண்டாயுதம் | வயது | |
| ஊர் | | தேதி | 16.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (16.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

**<u>சத்தியமாக சொல்கிறேன்</u>**

நான்  மருந்தக பிரதிநிதியாக வேலை செய்து வருகிறேன். நான் இந்த வழக்கில் 3ம் வாதி என்றால் சரி. 1ம் வாதி எனது அம்மா என்றால் சரி. 2வது வாதி எனது அண்ணன். நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து எங்களுக்கு உரிமையாது என்று அறிவிக்க கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். 2 அட்டவணை சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளோம். முதல் அட்டவணை சொத்தின் இரண்டு இன சொத்துக்ள் குறிப்பிட்டுள்ளேன். அதன் சர்வே எண் எனக்கு தெரியும் 179/1பி, 179/1எ. அதன் விஸ்திரணம் எனக்கு தெரியாது என்றால் சரி. வழக்கு பி அட்டவணை சொத்தில் இரண்டு இன சொத்துக்களை குறிப்பிட்டுள்ளேன். அதன் சர்வே எண். எனக்கு தெரியுமா என்றால் 67/1, 67/2 வழக்குசொத்துக்கள் ஆதியில் எனது தாத்தாவிற்கு பாத்தியமான சொத்துக்கள். என்னுடைய தாத்தாவின் பெயர் ஆறுமுகம். 29.06.1959 ம் தேதி எனது தாத்தா ஆறுமுகம் என்பவர் வழக்குசொத்தினை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரி. வேறு யாருக்காவது வழக்கு சொத்துக்கள் பாத்தியமா என்றால் எனது தாத்தாவிற்கு மட்டுமே பாத்தியமானது. எனது பாட்டியின் பெயர் இந்திராணி அம்மாள். வழக்கு சொத்துக்களை இந்திராணி அம்மாள் என்பவரும் கிரையம் பெற்றுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் இருவரும் சேர்ந்து தான் கிரையம் வாங்கியுள்ளார்கள். எனது தாத்தா ஆறுமுகம் பாட்டி இந்திராணி ஆகியோர் சேர்ந்து வழக்கு இ அட்டவணை சொத்துக்களின் 1,

2 அயிட்ட சொத்துக்களை 3 முதல் 6 வகையிலான பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரி.அதில் எனது பாட்டி கையொப்பம் செய்யவில்லை. யார் யார் சேர்ந்து கையெழுத்து போட்டுள்ளனர் என்றால் எனது பெரியப்பா மற்றும் பாட்டி ஆகியோர் சேர்ந்து கையொப்பம் போட்டுள்ளனர். 09.07.1980, 16.07.1980 மற்றும் 31.07.1980 தேதிகளிலேயே எனது அம்மா இந்திராணி மற்றும் தாத்தாவிடம் இருந்து ஏழுமலை என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் இல்லை எனது பெரியப்பாவிடம் இருந்து தான்கிரையம் பெற்றுள்ளார். ஏழுமலை கவுண்டர் என்பவர் கிரையம் பெற்றதிலிருந்து அவர் தான் பி அட்டவணையில் உள்ள 1,2 இன சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் இல்லை நான் தான் சொத்தினை பராமரித்து வருகிறேன். பி அட்டவணை சொத்திற்கான பட்டாவானது பிரதிவாதிகளின் பெயரில் மாறியுள்ளது என்றால் நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு மாற்றம் செய்துள்ளனர். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனாரான ஏழுமலை என்பவர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டிருந்தது என்றால் இல்லை. எனது தகப்பனார் பாலதண்டாயுதத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் என்னை சேர்த்து 2 பிள்ளைகள். எனது தாத்தா ஆறுமுகம் என்பவருக்கு 4 பிள்ளைகள் வாரிசுகள். அவர்கள் பெயர் தமிழ்செல்வி, சுடர்கொடி, தண்டபாணி, மற்றொருவர் இறந்துவிட்டார் அவரது பெயர் எனக்கு தெரியவில்லை. சுடர்கொடி என்றுபெயரை தவறாக சொல்கின்றேன் என்றாலும் அவர் பெயர் ஜெயகொடி என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை. வழக்கு சொத்து எனது தாத்தாவிற்கு உரிமையான சொத்து நான் கட்சி செய்வதால் அவர்கள் அனைவரையும் தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்றால் சரியல்ல அவர்களுக்கு சீர்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டுவிட்டது. நாங்கள் தமிழ்செல்வி, ஜெயகொடி ஆகியோருக்கு எந்த சீர்வரிசையும் செய்யவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் சரியல்ல. 4முதல் 6 வரையிலான பிரதிவாதிகளின் தகப்பனார் சொத்தினை வாங்கிய விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் எனது அப்பா இறந்தபிறகு தெரியும். எனது தகப்பனார் 2012 ம் வருடம் இறந்தார். எனது தகப்பனாருக்கு பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய விவரம் தெரியும் என்றால் தெரியாது. எனது தகப்பனாருக்கு 1980 ம்வருடம் பிரதிவாதிகளின் தகப்பனார் ஏழுமலை என்பவர் கிரையம் வாங்கிய விவரம் தெரியும் என்றால் இல்லை. ஏழுமலை என்பவரது தகப்பனார் 1980 ம் வருடம் கிரையம் பெற்ற முதல் இன்று வரை சொத்தினை அனுபவம் செய்து வருவதால் பிரதிவாதிகளுக்கு எதிரிடை அனுபவம் ஏற்பட்டுள்ளது

என்றால் இல்லை.ஏழுமலை மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களான 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் 03.07.2013 ல் ஒரு பாக பிரிவினை பத்திரத்தை ஏற்படுத்தி அதனை பதிவு செய்து வைத்துள்ளனர் என்றால் எனது பெரியப்பா பிரச்சனை செய்த பிறகு நாங்கள் வில்லங்கம் எடுத்து பார்த்தபோது தான் மேற்படி விவரம் எங்களுக்குதெரியவந்தது. என்னுடைய சொந்த ஊர் மேல்பாதி என்றால் சரி. தற்போது நான் எனது பாட்டி வீட்டில் வசித்து வருகிறேன். நான்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் மேல்பாதி கிராமத்தில் வசித்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. 3 முதல் 6 வரையிலான பிரதிாவதிகளின் தகப்பனார் 1980 ல் கிரையம் பெற்ற கிரையம் ஆவணம் செல்லாதது என அறிவிக்க வேண்டும் என்று வழக்கினை 3 ஆண்டுகளுக்குள் நான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் அவர்கள் மோசடியாக கிரையம் பெற்றுள்ளனர். 1 ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாத என பரிகாரத்தை கோரி நான் 3 வருடத்திற்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் அசல் ஆவணங்களை எனது பெரியப்பா வைத்துள்ளதால் அதனை உரிய காலத்தில் தாக்கல் செய்யவில்லை. 03.07.2013 ம் தேதி 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் மற்றும் அவரது தகப்பனார் ஏழுமலை ஆகியோருக்கு இடையே ஏற்படுத்திகொண்ட பாக அட்டவணை பத்திரம் செல்லாது என அறிவிக்க கோரி வழக்கினை 3 வருடத்திற்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் அந்த கிரையம் மோசடியாக ஏற்படுத்திகொண்ட கிரையம். வழக்கு சொத்துக்கு உண்டான பட்டாக்கள் அனைத்தும் தண்டபாணி என்பவரது பெயரில் தான் உள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ 6 னை யார் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு இருந்து மனு செய்து வாங்கினார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. கண்ணன் வாக்கூர் என்பவர் வாங்கியுள்ளதாக அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த பத்திரமானது 25.04.2016 ம் தேதி வாங்கப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ 8 பாலதண்டாயுதம் மற்றும் தண்டபாணி க்கு இடையே ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரம் ஏனக்கு தெரியாது என்றால் தெரியும். 2001 ம் வருடம்ஏற்படுத்தப்பட்டது தேதி மாதம் எனக்கு தெரியவில்லை. அது ஒரு பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரி. அது இலவச மக்கள் நீதிமன்றத்தின் வாயிலாக பிரிக்கப்பட்டது. அதில் பாக பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றும் அது நீதிமன்றத்தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்டது என்று அதில் இல்லை என்றால் சரி.வா.சாஆ 8ன் ஆறுமுகம் கவுண்டர் என்பவரது வாரிசுகள் அனைவரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரி. அவர்களுக்கு திருமணத்தின்போது

சீர்பொருட்கள் செய்ததால் அவர்களிடம்இருந்து கையொப்பம் பெறவில்லை. ஆறுமுகம் கவுண்டர் மற்ற வாரிசுகளுக்கு சீர்வரிசை செய்தார் என்பதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. சீர்வரிசை செய்தாலும் செய்யாவில்லை என்றாலும் அவசிய தரப்பினர்கள் என்பதால் இவ்வழக்கில் சேர்க்கப்படவேண்டும் என்றால் இல்லை. 2001 ம் வருடமே பாக பிரிவினை ஏற்பட்டதாக போலியாக ஒரு ஆவணத்தை நாங்கள் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.அதனை போன்றே பாகபிரிவினை பத்திரத்தை 20 ரூபாய் முத்திரை தாளில் ஏற்படுத்தியிருக்கவேண்டும் என்பதும் 10 பாய் முத்திரை தாளில் ஏற்படுத்தியுள்ளதால் அது செல்லாது என்றால் சரியல்ல. நான் அந்தஆவணத்திற்கு நீதிமன்றம் கட்டணம் செலுத்த வேண்டும் என்பதால் அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சாஆ 11 ஆறுமுகம் கவுண்டர் மகன் தண்டபாணி என்பவர் பெயரில்தான் உள்ளது என்றால் சரி. வ.சாஆ 13 தண்டபாணி என்று எழுதப்பட்டு அது அழிக்கப்பட்டு பாலதண்டாயுதம் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சஆ 14 வாய்தா ரசீதுகள் வழக்கு சொத்திற்கு உரியன இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 16 ல் 11 கணினி சிட்டாவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. பட்டா எண். 1021 ஆனது இந்திராணி என்பவரது பாட்டியின் பெயரில் உள்ளது என்றால் சரி. பின்னிட்டு அதே பட்டா எண். லட்சுமி,இந்திராணிஆகியோர் பெயரில் உள்ளது என்றால் சரி. பட்டா எண் 73 ஆனது ராமசந்திரன் என்பவரது பெயரில் உள்ளது என்றால் சரி. பட்டா எண். 151 ஆனது விட்டல் நாதன் என்பவரது பெயரில் உள்ளது என்றால் சரி. பட்டா எண். 1101 ஆனது ஏ.கே ஆர் எக்ஸ்பிரஸ் இணை இயக்குநர் ரவிகுமார் த/பெ அருண்குமார் என உள்ளது என்றால் சரி. பட்டா எண். 1215 தண்டபாணி என்பவரது பெயரில் உள்ளது என்றால் சரி. பட்டா எண். 539 ஆறுமுககவுண்டர் தண்டாணி பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளதுள ன்றால் சரி. பட்டா எண்56 ஏழுமலை கவுண்டர் என்பவரது பெயரிலல் உள்ளதுஎன்றால் சரி. பட்டா எண். 268 தண்டபாணி என்பவரது பெயரில் உள்ளது என்றால் சரி. சிட்டாவில் உள்ள அனைத்து தரப்பினர்களையும்இவ்வழக்கிகல் அவசிய தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. அவ்வாறு சேர்க்காமல் 3 , 6 பிரதிவாதிகளை மட்டும் இந்த வழக்கில் சேர்த்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. இந்திராணி என்பவர் 2000 வருடம் இறந்துவிட்டார். காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ள சி.எஸ் ஆர் பற்றி எனக்க நேரடியாக தெரியாது என்றால் தெரியும். நான் நேரடியாக எந்த காவல் நிலையத்திலும் புகார் அளிக்கவில்லை என்றால்

வளவனூர் காவல் நிலையத்தில் நானும் எனது அம்மாவும் சென்று புகார் கொடுத்துள்ளோம். தேதி வருடம் நியாபகமில்லை. நான் 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் மீது எந்த வித புகார் அளிக்கப்படவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. நான் ஆறுமுகம் என்பவரது வாரிசு சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் வழக்கு சொத்தினை 1980ம் வருடம் முதல் அனுபவித்து வருவதால் எனக்கு எந்தவிதஉரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சாஆ17 யை யார் பெற்றனர் என்றால் அது எனக்கு தெரியவில்லை. எனது தாத்தா வாங்கியிருப்பார் என்று நினைக்கிறேன். எனது தாத்தாவின் பெயர் கண்ணன். இந்த வில்லங்க சான்றினை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வில்லங்கத்தில் யார் யாருக்கு எழுதி கொடுத்தனர் என்று எனக்கு தெரியாது என்றால் எனது தாத்தா சொல்லியதன் பேரில் தெரியும். எனது தாத்தா ஆறுமுகம் என்பவருக்கு ஏழுமலை என்பவர் கிரையம் கொடுத்தது அவருக்கு தெரியும் என்று என்னிடம் சொல்லியுள்ளார்.அமேற்படி விவரத்தை சொன்னவரின் பெயர் கண்ணன் தாத்தா என்றால் சரி. அந்த வில்லங்கத்தில் நிறைய நபர்களை எனக்கு தெரியவில்லை என்றால் சரி. நானும் 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் ஒரே ஊரில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரி. வழக்கு பி அட்டவணையில் உள்ள 1, 2 சொத்துக்களை கிரையம் பெற்று அதனை தோட்டமாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. 25.07.2007 ம் தேதி தண்டபாணி என்பவர் புருஷோத்தம்மன் என்பவருக்கு சொத்தினை அடமானம் போட்டுள்ளார் என்பதை மீட்க நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேலும் குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram